بسم الله الرحمن الرحيم　نحمده ونصلي على رسوله الكريم　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி **3**

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் **23**

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

22 ரம்ஜான் 1439 ஹிஜ்ரி கமரி 7 இஹ்ஸான் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

7 ஜூன் 2018


**அல்லாஹ்வின் கட்டளை**

وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلّٰهِ

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வின் (திருப்திக்காக) முழுமையாக்குங்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 197)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வொரு அஹ்மதியும் படிக்க வேண்டும். மாறாக, முழு நூலையும் படிக்க வேண்டும்

பெரியோர்களாக இருந்து சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாக கருதாதீர்கள். நீங்கள் அறிவாளியாக இருந்து அறிவீனர்களுக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையால் அவர்களை அவமானப்படுத்தாதீர்கள். நீங்கள் செல்வந்தர்களாக இருந்து ஏழை எளியவர்களுக்கு உதவி புரியுங்கள்; தன்னலத்தால் அவர்கள் மீது அகங்காரம் கொள்ளாதீர்கள்

நீங்கள் ஒருவருக்கொருவர் உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது சகோதரர்களின் குற்றங்களை மன்னியுங்கள். தனது சகோதரனுடன் சமாதானத்தை விரும்பாதவன் தீயவனாக இருக்கின்றான். அவன் துண்டிக்கப்படுவான். ஏனெனில் அவன் வேற்றுமையை உண்டாக்குகிறான். நீங்கள் எல்லா விதமான மன இச்சைகளை விட்டு விடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் வெறுப்பை விட்டு விடுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்து கொண்டு பொய்யர்களைப்போல் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். இதனால் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள்

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

அருட்கொடையின் அடையாளத்தை காண்பிப்பது தொன்றுதொட்டே இறைவனது வழக்கமாக இருந்து வருகிறது. ஆயினும் உங்களுக்கும் அவனுக்குமிடையில் எவ்வித இடைவெளியுமில்லாமலிருந்தால் மட்டுமே இறைவனின் அவ்வழக்கத்தில் நீங்களும் பங்கு பெற முடியும். அதனால் உங்களது விருப்பம் அவனது விருப்பமாகவும், உங்களது ஆசை அவனது ஆசையாகவும் இருக்க வேண்டும். எல்லாம் இறைவனது விருப்பப்படியே நடக்கும் பொருட்டு வெற்றியிலும் தோல்வியிலும் ஒவ்வொரு சமயத்திலும் உங்களது தலை இறைவன் முன்னிலையில் பணிந்து கொண்டே இருக்க வேண்டும். நீங்கள் இவ்வாறு நடப்பீர்களேயானால் சில காலமாக தனது முகத்தை மறைத்து வந்த அவ்விறைவன் உங்களிடம் வெளிப்படுவான்.

இதன்படி செயலாற்றக்கூடியவரும் அவனது திருப்தியை விரும்பக்கூடிய கழா–வ–கத்ர் என்னும் அவனது தீர்ப்பின் மீது கோபம் கொள்ளாதவரும் ஆகிய எவரேனும் உங்களில் இருக்கின்றாரா? எனவே நீங்கள் துன்பங்களை சோதனைகளை காணும் போதெல்லாம் உங்கள் பாதங்களை மேலும் முன்னே எடுத்து வையுங்கள். இதுவே உங்களது முன்னேற்றத்திற்குரிய வழியாகும். அவனது தவ்ஹீது என்னும் ஏக இறைகொள்கையை முழு உலகிலும் பரப்புவதற்கு உங்களது அனைத்து சக்தியைக் கொண்டும் முயலுங்கள். அவனது அடியார்கள் மீது கருணை காட்டுங்கள். மேலும் நாவாலோ கைகளாலோ வேறு எவ்வகையாலோ அவர்கள் மீது அநியாயம் செய்யாதீர்கள். அவனது படைப்பினங்களின் நலனுக்காக முயன்று கொண்டே இருங்கள்.

உங்களின் கீழ் இருக்கக் கூடியவராக இருந்தாலும் அவர் மீது கர்வம் காட்டாதீர்கள். ஒருவர் உங்களை திட்டினாலும் எவரையும் திட்டாதீர்கள். இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் பொருட்டு நீங்கள் எளிமை, சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் ஆகியவற்றைக் கைக்கொண்டு படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துபவர்கள் பலர் இருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் உள்ளத்தால் ஓநாய்களாக இருக்கிறார்கள். புறத்தில்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஸதுல்லாஹ் (அல்லாஹ்வின் சிங்கம்) மற்றும் அஸதே ரஸூல் (தூதரின் சிங்கம்) என்றழைக்கப்பட்ட ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது மற்றும் அவர்களிடம் காணப்பட்ட மார்க்கத்தின் மீதான தன்மான உணர்வு, அவர்களின் தைரியம், வீரம், இரத்த உறவுகளைப் பேணுதல், ஷஹாதத் தொடர்பான உள்ளத்தை உலுக்கக்கூடிய சம்பவங்கள்**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 4 மே 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **5 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمدا عبده و رسوله أما بعد فأعوذ بالله من الشيطان الرجيم ۔ بسم الله الرحمن الرحيم الحمد لله رب العالمين ۔ الرحمن الرحيم ۔ مالك يوم الدين ۔ إياك نعبد و إياك نستعين ۔ اهدنا الصراط المستقيم ۔ صراط الذين أنعمت عليهم غير المغضوب عليهم ولا الضالين

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் தோன்றியபோது அரபு சமுதாயத்தின் நாகரீகம், ஒழுக்கம் மற்றும் ஆன்மீகத்தின் நிலைமை எவ்வாறு இருந்தது? எல்லா வீடுகளிலும் போர், மது அருந்துதல், விபச்சாரம், கொள்ளையடித்தல், வழிப்பறி என்று எல்லா வகையான தீமையும் இருந்தது. இறைவனுடனும் நல்லொழுக்கத்துடனும் எவருக்கும் எந்த தொடர்பும் இருக்கவில்லை. ஒவ்வொருவரும் ஃபிர்அவ்னாக இருந்தனர்.

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் வருகையினால் அவர்கள் இஸ்லாத்தை தழுவியதும் எத்தகைய இறை நேசமும் ஒற்றுமையின் ஆன்மாவும் அவர்களிடம் உருவானது என்றால் அவர்களில் ஒவ்வொருவரும் இறைவனின் வழியில் மரணிப்பதற்காக ஆயத்தமாகி விட்டனர். அவர்கள் பைஅத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்திக் காட்டி விட்டனர். தமது செயலால் அவர்கள் பைஅத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தினர். மேலும் தனது நடைமுறையின் மூலமாக இதற்கான முன்மாதிரியைக் காட்டினர்.

அன்னார் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் எந்த அளவு நன்றியுணர்வின் முன்மாதிரியை காட்டினார்கள்? அதற்கு இணையான ஒரு உதாரணத்தை இதற்கு முன்னர் இருந்ததில்லை. வருங்காலத்திலும் அது தென்படவில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆனால், இறைவன் நாடினால் மீண்டும் அவனால் அவ்வாறே செய்ய முடியும். இந்த முன்மாதிரிகளால் மற்றவர்களுக்கு பலன் இருக்கின்றது. இந்த ஜமாஅத்தில் அல்லாஹ் இதுபோன்ற முன்மாதிரிகளை உருவாக்க முடியும் என்று தனது ஜமாஅத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் சஹாபாக்களைப் புகழ்ந்து கூறியவாறு எவ்வளவு சிறந்த முறையில் கூறியுள்ளான்.

مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا اللّٰهَ عَلَيْهِ فَمِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ

அதாவது நம்பிக்கை கொண்டவர்களில் அத்தகைய ஆண்கள் இருக்கின்றனர். அவர்கள் இறைவனுடன் செய்து கொண்ட தமது வாக்குறுதியை உண்மைப்படுத்திக் காட்டி விடட்னர்; அவர்களில் சிலர் தமது உயிரை அர்ப்பணித்து விட்டனர். இன்னும் சிலர் உயிரை அர்ப்பணிப்பதற்கு ஆயத்தமாக அமர்ந்துள்ளனர். **(33:24)**

அன்னார் கூறுகின்றார்கள்: சஹாபாக்களை பற்றி திருக்குர்ஆனில் புகழ்ந்து கூறப்பட்டுள்ள வசனங்களை ஒன்று திரட்டினால் இதை விட மேலான வேறு எந்தவோர் அழகிய முன்மாதிரியும் இருக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 431–433. 1985 ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே, சஹாபாக்கள் பற்றி கூறப்பட்டுள்ள இந்த வசனத்தை விட வேறு எந்தவோர் அழகிய முன்மாதிரியும் கிடையாது. ஆகவே, நன்மைகள், தியாகங்கள் ஆகியவற்றின் இந்த முன்மாதிரி நமக்கு அழகிய முன்மாதிரியாகும்.

கடந்த சில நாட்களாக சில குத்பாக்களில் நான் சஹாபாக்களின் நிலைமைகள் பற்றி எடுத்துக் கூறியிருந்தேன். அவர்களில் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களைப் பற்றியும் கூறியிருந்தேன். ஏனைய சஹாபாக்கள் பற்றியும் கூறினேன். ஆனால், முதலில் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்கள் பற்றி மட்டும் எடுத்துக் கூற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இவர்களுக்கு ஒரு குறிப்பான அந்தஸ்து இருக்கின்றது. இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அல்லாஹ் இவர்களிடம் திருப்தி அடைந்துள்ளான். அல்லாஹ்வின் குறிப்பான திருப்தியைப் பெற்ற மக்களாக அவர்கள் இருக்கின்றனர்.

இன்று நான் அப்துல் முத்தலிப் அவர்களின் மகனான ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். குறிப்பாக இவர்கள் எவ்வாறு முஸ்லிமானார்கள் என்பது பற்றி விளக்கமாக நபிமொழிகளிலும் வரலாற்றிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் ஸய்யிதுஷ் ஷுஹதா (ஷஹீதுகளின் தலைவர்) என்ற பெயரில் புகழ்பெற்று விளங்கினார்கள். இவ்வாறே அஸதுல்லாஹ் (அல்லாஹ்வின் சிங்கம்) மற்றும் அஸதே ரஸூல் (தூதரின் சிங்கம்) என்ற பட்டப்பெயர்களும் இவர்களுக்கு இருந்தது.

குரைஷியர்களின் தலைவரான ஹஸ்ரத் அப்துல் முத்தலிப் அவர்களின் மகனாகவும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரராகவும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் தாயாரின் பெயர் ஹாலா ஆகும். இவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தாயாரான ஹஸ்ரத் ஆமினா அவர்களின் தந்தையின் சகோதரர் மகள் ஆவார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட வயதில் இரண்டு வருடம் அல்லது ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப நான்கு வருடம் பெரியவர் ஆவார்கள்.

(இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 369 பைரூத்திலுள்ள தாருல் தாருல் ஜைலில் 1992 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சகோதரராக இருந்தார்கள். ஸைபியா என்ற அடிமைப் பெண் இவ்விருவருக்கும் பாலூட்டினார்கள்.

(ஷரஹ் ஸர்கானி தொகுதி 4 பக்கம் 499. 1996 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள், தான் நபி என்று வாதம் செய்த பிறகு நபித்துவத்தின் ஆறாவது ஆண்டில் தாரே அர்கம் இருந்த அந்த காலக்கட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்ற நற்பேற்றைப் பெற்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 6. 1996 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சம்பவம் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் வரலாற்று சம்பவங்களின் ஒளியில் தனக்கே உரிய பாணியில் எடுத்துக் கூறியுள்ளார்கள். இது பற்றிய சுருக்கத்தையும் இதன் விபரங்களையும் நான் எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் எவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்? அதற்கு எது காரணமாக இருந்தது என்பதைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கும் போது, மேலும் அபூஜஹில், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அநீதியிழைத்தபோது எவ்வாறு அவர்களுக்கு தன்மான உணர்வு ஏற்பட்டது என்பதைப் பார்க்கும்போது உள்ளம் நெகிழ்ந்து விடுகின்றது.

எந்நிலையிலும் அது பற்றிய சம்பவம் இவ்வாறு வருகின்றது. ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஃபா, மர்வா ஆகிய இரு மலைகளுக்கு நடுவிலுள்ள ஒரு கல்லில் அமர்ந்திருந்தார்கள். இறைவனின் ஏகத்துவத்தை எப்படி நிலைநாட்டுவது என்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். இந்த தருணத்தில் அபூஜஹில் அங்கு வந்தான். அவன் வந்ததும் முஹம்மதே (ஸல்)! நீ கூறும் விஷயங்களிலிருந்து விலகாமல் இருக்கின்றாய் என்று கூறியவாறு பெருமானார் (ஸல்) அவர்களை மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் அவன் ஏசிப்பேச ஆரம்பித்தான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் அமைதியாக அவனது ஏச்சுப் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருந்தவாறு அதனை சகித்துக் கொண்டார்கள். ஒரு சொல் கூட அன்னாரது நாவிலிருந்து வெளிவரவில்லை. அபூஜஹில் தனது உள்ளம் திருப்தியடையும் அளவிற்கு பெருமானார் (ஸல்) அவர்களை ஏசிப்பேசிய பிறகு அந்த பாக்கியமற்றவன் முன்னால் வந்து பெருமானார் (ஸல்) அவர்களது முகத்தில் அடித்தான்.

அதற்குப் பிறகும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் அவனிடம் எதுவும் கூறவில்லை. எந்த இடத்தில் அன்னார் அமர்ந்திருந்தார்களோ, எந்த இடத்தில் அபூஜஹில் அன்னாரை ஏசிப் பேசினானோ அந்த இடத்திற்கு எதிர்புறத்தில்தான் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் வீடு இருந்தது. ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் அந்த சமயம் வரை நம்பிக்கை கொள்ளவில்லை. நாள்தோறும் காலையில் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு வேட்டையாடுவதற்குச் செல்வது அவர்களின் வழக்கமாக இருந்தது. அவர்கள் மாலையில் திரும்பி வருவார்கள்.

பிறகு குரைஷியர்களின் சபையில் அவர்கள் அமர்வார்கள். அபூஜஹில், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏசிப்பேசிய அந்த நாளில் மேலும் அவர்களுடன் மிகவும் தீய முறையில் நடந்து கொண்ட அந்த நாளில் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் வேட்டையாடுவதற்காக சென்றிருந்தார்கள். ஆனால் தற்செயலாக ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் ஓர் அடிமைப் பெண் வீட்டின் கதவுக்கருகில் நின்றவாறு அபூஜஹிலின் நடவடிக்கையை பார்த்துக் கொண்டிருந்தார். அபூஜஹில் மீண்டும் மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்தியவாறு அதிகமாக அன்னாரை ஏசிப் பேசிக் கொண்டிருந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தவாறு அவற்றை சகித்துக் கொண்டார்கள். அந்த அடிமைப் பெண் கதவுக்கருகில் நின்றவாறு இந்த எல்லா காட்சியையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:

சந்தேகமின்றி அவள் ஒரு பெண்ணாகத்தான் இருந்தாள். காஃபிரான பெண்ணாக இருந்தாள். ஆனால் பழங்காலத்தில் மக்காவிலுள்ளவர்கள் தமது அடிமைகள் மீது அநீதியிழைத்த அந்த காலத்திலும் கூட சில நல்லவர்கள் தமது அடிமைகளுடன் நல்ல முறையில் நடந்து கொண்டனர். மிக நீண்ட காலம் கழிந்த பிறகு அந்த அடிமைகள் அந்த குடும்பத்தின் ஓர் அங்கமாகக் கருதப்பட்டு வந்தனர்.

இவ்வாறே அவர்களும் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களது குடும்பத்தின் அடிமைப் பெண்ணாக இருந்தார்கள். அவள் தமது கண்களால் நடந்த எல்லாவற்றையும் கண்டாள். மேலும் தமது காதுகளால் எல்லாவற்றையும் கேட்டாள். இதனால் அவள்மீது பெரும் தாக்கம் ஏற்பட்டது. ஆனால் எதுவும் செய்ய இயலாதவளாக அவள் இருந்தாள்.

நடப்பதை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். கேட்டுக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள்ளேயே மனம் வருந்தி அவள் பொருமிக் கொண்டிருந்தாள். வேதனையடைந்தாள். ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து எழுந்து சென்ற பிறகு அவளும் தனது பணிகளில் ஈடுபட ஆரம்பித்து விட்டாள். வேட்டையாடிய பிறகு மாலையில் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் திரும்பி வந்து தனது சவாரியிலிருந்து கீழே இறங்கியதும், கைகளில் வில்லையும் அம்பையும் ஏந்தியவாறு வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் மிகவும் பெருமையுடன் தமது வீட்டில் நுழைந்த சமயத்தில் அந்த அடிமைப் பெண் எழுந்து நின்றாள். நீண்ட நேரம் அவள் தனது கோபத்தையும் துக்கத்தையும் அடக்கி வைத்திருந்தாள்.

அவள் ஹம்ஸா அவர்களை நோக்கி மிகவும் உரத்த குரலில், உங்களுக்கு வெட்கமாக இல்லையா? பெரிய வீரராக நீங்கள் உங்களை காட்டிக் கொண்டு திரிகின்றீர்கள் என்று கூறினாள். ஹம்ஸா அவர்கள் மிகவும் வியப்புடன் என்ன நடந்தது? என்று கேட்டார்கள். அதற்கு அந்த அடிமைப் பெண் என்ன நடந்தது என்றால் உங்கள் மருமகனான முஹம்மது (ஸல்) அவர்கள் இங்கு அமர்ந்திருந்தார்கள். அபூஜஹில் வந்து முஹம்மது (ஸல்) அவர்களை தாக்கினார். அளவேயில்லாமல் மிகவும் அதிகமாக அவர்களை அவன் ஏசிப் பேச ஆரம்பித்து விட்டான். பிறகு அவர்களது முகத்தில் அடித்தான். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுக்கு எதிரில் எதுவுமே செய்யவில்லை. அமைதியாக அவன் கூறுவதை அவர்கள் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். அபூஜஹில் ஏசிப் பேசிக் கொண்டேயிருந்தான். பிறகு சோர்வடைந்து அங்கிருந்து சென்று விட்டான். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள் அவன் கூறிய எந்த விஷயத்திற்கும் பதில் கூறாமல் இருந்ததை நான் பார்த்தேன். நீங்களோ மிகப்பெரும் வீரராக உங்களை காட்டிக் கொண்டு திரிகின்றீர்கள்.

மிகவும் பெருமையாக வேட்டையாடி விட்டு திரும்பி வந்துள்ளீர்கள். நீங்கள் இங்கிருக்கும்போது உங்களது மருமகனுடன் இவ்வாறு அவன் நடந்து கொண்டதைப் பார்த்து உங்களுக்கு வெட்கமாக இல்லையா? என்று அந்த அடிமைப் பெண் கேட்டாள். ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் அந்த நேரம் வரை முஸ்லிமாக ஆகவில்லை. இம்மக்கள் குரைஷியர்களின் தலைவர்களின் ஒருவராகக் கருதப்பட்டு வந்ததும் இதற்கு ஒரு காரணமாக இருந்தது. அங்குள்ள ஆட்சியின் காரணமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையாளர் ஆவார்கள் என்பதை அவர்கள் புரிந்திருந்தார்கள். ஆனால், அந்த சமயத்தில் தனது மகத்துவத்தையும் கம்பீரத்தையும் ஈமானுக்காக தியாகம் செய்வதற்கு ஹம்ஸா அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. ஆனால், அவர்கள் தமது அடிமைப் பெண்ணிடமிருந்து இந்த சம்பத்தைக் கேட்டதும் அவர்களது கண்களில் இரத்தம் வர ஆரம்பித்தது. அவர்களின் குடும்ப தன்மான உணர்வு பொங்கி எழுந்தது.

அதனால், ஓய்வு எடுக்காமலேயே அப்படியே கோபத்துடன் கஅபாவை நோக்கி அவர்கள் செல்ல ஆரம்பித்தார்கள். முதலில் அவர்கள் கஅபாவை வலம் வந்தார்கள். பிறகு அபூஜஹில் அமர்ந்திருந்த அந்த சபையின் பக்கம் சென்றார்கள். அங்கு அபூஜஹில் பெருமையடித்தவாறு நடந்த இந்த சம்பவத்தை மிகவும் ரசனையாக எடுத்துக் கூறிக் கொண்டிருந்தான். இன்று நான் முஹம்மது (ஸல்) அவர்களுடன் இவ்வாறு நடந்து கொண்டேன் என்று கூறினான்.

ஹம்ஸா அவர்கள் இந்த சபைக்கு வந்து சேர்ந்ததும் தனது வில்லால் மிகவும் வலுவாக அபூஜஹிலின் தலையில் அடித்தார்கள். மேலும், நீ உனது வீரத்தைப் பற்றி வாதம் செய்கின்றாயா? முஹம்மது (ஸல்) அவர்களை நான் இவ்வாறு இழிவுபடுத்தினேன் என்று மக்களுக்கு நீர் கூறுகின்றீரா? முஹம்மது

(ஸல்) அவர்களோ எதுவுமே பேசாமல் இருந்து விட்டார்கள். இப்போது நான் உன்னை இழிவுபடுத்துகின்றேன். உமக்கு தைரியம் இருந்தால் எனக்கு முன்னால் பேசு என்று ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கூறினார்கள். அந்த சமயத்தில் அபூஜஹில் மக்காவில் ஓர் அரசரின் தகுதியைப் பெற்றிருந்தான். சமுதாயத்தின் தலைவராக இருந்தான். அவனது நிலைமை ஃபிர்அவ்னின் அதே நிலைமையாகத்தான் இருந்தது. அவனது நண்பர்கள் நடந்தவற்றை பார்த்தபோது அவர்கள் மிகவும் உணர்வுடன் எழுந்தனர். அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸாவின் மீது தாக்குதல் நடத்த விரும்பினர்.

ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்து அவனது ஏச்சுப் பேச்சுகளைக் கேட்டு அவற்றை சகித்துக் கொண்டதன் காரணமாகவும் ஹம்ஸா அவர்களின் துணிச்சலையும் தைரியத்தையும் பார்த்ததன் காரணமாகவும் அபூஜஹில் திகிலுக்கு ஆளாகி அவர்களுக்கு இடையில் வந்து நின்று அவர்கள் தாக்குவதை தடுத்து நிறுத்தினான். மேலும், போகட்டும் விட்டு விடுங்கள். உண்மையில் என்னிடம்தான் தவறு நிகழ்ந்தது. ஹம்ஸா உண்மையின் பக்கம் இருக்கின்றார்கள் என்று கூறினான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனக்கே உரிய பாணியில் இவ்வாறு எழுதினார்கள்: முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த சமயத்தில் ஸஃபா, மர்வா ஆகிய இரு மலைகளிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்களோ அப்போது அவர்கள் தமது உள்ளத்தில் எனது பணி சண்டையிடுவதல்ல. மாறாக, பொறுமையுடன் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு அவற்றை சகித்துக் கொள்வதே எனது பணியாகும் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இறைவன் அரியணையில் அமர்ந்தவாறு முஹம்மதே (ஸல்)! நீர் சண்டையிடுவதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. ஆனால் உமது எதிரிகளை எதிர்த்து நிற்பதற்காக நாம் உமது இடத்தில் இருக்கவில்லையா? என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஆக, இறைவன் அதே நாளில் அபூஜஹிலை எதிர்த்து நின்றவாறு தமது உயிரை அர்ப்பணிக்கின்ற ஒருவரை அவர்களுக்கு வழங்கி விட்டான். தமது வில்லால் அபூஜஹிலின் தலையில் அடித்த அதே சபையில் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள், தான் ஈமான் கொண்டதாக அறிவிப்பு செய்தார்கள்.

மேலும், அபூஜஹிலை நோக்கி நீ முஹம்மது (ஸல்) அவர்களை, நான் இறைவனின் தூதராக இருக்கின்றேன். மலக்குகள் என் மீது இறங்குகின்றனர் என்று கூறியதனால் தான் நீ அவர்களை ஏசிப் பேசுகிறாய். சற்று காதுகளை திறந்து கேட்டுக் கொள். நானும் இன்றிலிருந்து முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்திலேயே நிலைத்து நிற்கின்றேன். முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியதையே நானும் கூறுகின்றேன். உமக்கு தைரியம் இருந்தால் என்னை எதிர்த்து வந்து பார் என்று கூறியவாறு ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் முஸ்லிமாகி விட்டார்கள்.

(ரஸூலே கரீம் (ஸல்) கி ஸிந்தகி கே தமாம் அஹம் வாகியாத் என்ற நூலிருந்து... அன்வாருல் உலூம் தொகுதி 19 பக்கம் 137–139)

அறிவிப்புகளில் இவ்வாறு வருகின்றது: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் முஸ்லிமாக ஆன பிறகு மக்காவிலிருந்த முஸ்லிம்களின் ஈமான் மிகவும் வலுவடைந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 6. 1990 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

இன்னும் சொல்வதென்றால் ஆங்கிலேயே வரலாற்றாசிரியரான சர் வில்லியம் மூர் அவர்களும் இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அதாவது, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் விளைவாக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் நோக்கம் வலுவடைந்தது என்று அவர் கூறுகின்றார்.

(The Life of Mohammad by sir William Muir, heading the prophet insulted pg 89 Edition 1923)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஏனைய முஸ்லிம்களுடன் சேர்ந்து மதீனாவிற்கு இடம் பெயர்ந்து சென்ற போது குல்ஸூம் பின் ஹிதம் அவர்களுடைய வீட்டில் தங்கினார்கள். மேலும் இன்னொரு அறிவிப்பில் அவர்கள், சஅத் பின் கைஸ்மா அவர்களின் வீட்டில் தங்கினார்கள் என்று வந்துள்ளது.

எந்நிலையிலும் மதினாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) ஆகியோருக்கிடையில் சகோதர உறவை நிலைநாட்டினார்கள். இதன் அடிப்படையில் உஹது போருக்காக செல்லும்போது ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸைதிற்காக வஸிய்யத் செய்திருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 6. 1990 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகும் கூட காஃபிர்களின் அநீதிகள் முடியவில்லை. முஸ்லிம்களுக்கு தொந்தரவு கொடுப்பது, அவர்களை சீண்டுவது ஆகியவை முடிவுக்கு வரவில்லை. அதனால் முஸ்லிம்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிது வந்தது. காஃபிர்களின் அசைவுகள், செயல்கள் ஆகியவற்றின் மீது தமது பார்வையை வைத்திருக்க வேண்டியதிருந்தது. கண்காணிக்க வேண்டியதிருந்தது.

அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: குரைஷியர்களின் தாக்குதல்கள் மற்றும் அவர்களது அசைவுகள் செயல்கள் பற்றி அறிந்து கொள்வதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சில திட்டங்கள் வகுக்க வேண்டியது அவசியமானது. அத்திட்டத்தில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு வழக்கத்திற்கு அப்பாற்பட்ட முறையில் தொண்டாற்றுவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் ரபீவுல் அவ்வல் மாதத்தில் நபி கரீம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் தலைமையில் 30 சவாரிகளைக் கொண்ட முஹாஜிர்களின் ஒரு படையை தஸ்தா ஈஸ் என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் அவர்களது தோழர்களும் விரைவாக அங்கு சென்று சேர்ந்தபோது அவர்கள் பார்த்தது என்னவென்றால், மக்காவின் மிகப்பெரும் தலைவரான அபூஜஹில் 300 பேர்களைக் கொண்ட ஒரு படையுடன் அவர்களை வரவேற்பதற்காக அங்கு இருந்தான். முஸ்லிம்களின் எண்ணிக்கையை விட இந்த எண்ணிக்கை பத்து மடங்கு அதிகமாக இருந்தது. ஆனால், முஸ்லிம்கள் இறைவன் மற்றும் அவனது தூதரின் கட்டளையை நிறைவேற்றும் வகையில் இதற்காக புறப்பட்டிருந்தார்கள்.

எனவே மரணத்தின் அச்சமானது அவர்களை இதிலிருந்து பின்தங்க வைக்க முடியாது. இரண்டு படைகளும் ஒன்று மற்றொன்றிற்கு எதிராக நிற்க ஆரம்பித்தது. போர் ஆரம்பமாக இருந்தபோது அந்த பகுதியின் தலைவரான மஜ்தீ பின் அம்ர் அல்ஜுஹ்னி அவர்களுக்கு இரண்டு அணிகளில் உள்ளவர்களுடன் தொடர்பு இருந்ததனால் அவர் இவர்களுக்கிடையில் வந்து இருவரையும் தடுத்தி நிறுத்தியதனால் நடைபெற இருந்த போர் நின்று விட்டது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) M.A அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) என்ற நூலிலிருந்து பக்கம் 329)

இதுவும் அறிவிப்புகளில் வருகின்றது: அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முதலாவது கொடியை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்குத்தான் வழங்கினார்கள். சில அறிவிப்புகளில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்குதான் வழங்கினார்கள்.

சில அறிவிப்புகளில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களும் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களும் சேர்ந்து ஒரு போருக்காக படையெடுத்துச் சென்றார்கள் என்று வருகிறது. (எனவே இவ்விஷயத்தில் யாருக்கு கொடியை வழங்கினார்கள் என்ற சந்தேகம்

இருக்கின்றது). எந்நிலையிலும் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் பனூ கைனிகா போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களே ஏந்தி இருந்தார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 283)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் எப்போதும்ம ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப செயல்பட்டு வந்தார்கள். மேலும் தங்களது தன்னம்பிக்கையையும் சுயமரியாதையையும் நிலைத்திருக்கும்படி செய்வது சிறந்ததாகும். அதை நிலைநாட்ட வேண்டும் என்ற கட்டளைக்கு ஏற்ப ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் எப்போதும் செயல்பட்டு வந்தார்கள்.

அறிவிப்பில் வருகின்றது. மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகு மற்ற முஸ்லிம்களைப் போன்று ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் பொருளாதார நிலைமையும் மிகவும் மோசமாக இருந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இந்த நாட்களில் ஒரு நாள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் நபி கரீம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். ஏதாவது, ஒரு தொண்டினை என்னிடம் ஒப்படையுங்கள். அதன் மூலம் வாழ்வாதாரத்திற்கு தேவைப்படுபவற்றை நான் பெற்றுக் கொள்ளும் வழியை ஏற்படுத்திக் கொள்வேன் என்று கூறினார்கள்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களிடம், ஹம்ஸாவே! உங்களது சுய மரியாதையை உயிருடன் வைத்திருப்பது உங்களுக்கு அதிக விருப்பமுள்ளதாக இருக்குமா? அல்லது அதை அழித்து விடுவது உங்களுக்கு அதிக விருப்பமானதாக இருக்குமா? என்று கேட்டார்கள். அதற்கு ஹம்ஸா (ரலி) அவர்கள், நான் அதனை உயிருடன் வைப்பதையே விரும்புகின்றேன் என்று பதில் கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பிறகு உங்களது சுயமரியாதையை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 624 ஹதீஸ் எண் 6639. 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

பிறகு நபி கரீம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களிடம் துஆக்களில் அழுத்தம் காட்டும்படி கூறினார்கள். சில குறிப்பான துஆக்களை அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த துஆவை கண்டிப்பாக உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதாவது அல்லாஹ்வே! நான் உன்னிடம் உனது மகத்தான பெயரையும் உனது மிகப்பெரும் விருப்பத்தையும் ஊடகமாக வைத்து உன்னிடம் வேண்டுகின்றேன்.

(அல்அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 106 ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப். 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இதற்குப் பிறகு எப்போதும் அவர்கள் இந்த துஆக்களின் கனிகளைப் பெற்று வந்தார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு துஆக்கள் மீது எந்த அளவு நம்பிக்கையும் நிச்சய உறுதியும் இருந்தது என்றால் அறிவிப்புகளில் இந்த விஷயமும் நமக்கு தெரிய வருகின்றது. அவ்வாறு ஏன் இருக்காது? இந்த துஆக்களின் மூலமாகவே வெளிப்படையாக எதுவுமே தமது கைகளில் இல்லாமலிருந்த மற்றும் எவ்வித உதவியாளரும் இல்லாமலிருந்த இந்த முஹாஜிருக்கு இறைவன் வீட்டையும் தேவையான எல்லாவற்றையும் வழங்கினான்.

சில காலம் கழிந்த பிறகு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் பனு நஜ்ஜாரைச் சார்ந்த ஓர் அன்ஸாரி பெண்ணான கெய்ஸ் அவர்களின் மகளான ஹவ்லா அவர்களை திருமணம் செய்தார்கள். நபி கரீம் (ஸல்) அவர்களது வீட்டிற்குச் சென்று வந்தார்கள். ஹஸ்ரத் ஹவ்லா அவர்கள் பின்னர் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் அன்பு நிறைந்த அந்த காலத்தில் நடந்த விஷயங்களை கூறி வந்தார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். நான் அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கியாமத் நாளன்று உங்களுக்கு கவ்ஸர் தடாகம் வழங்கப்படும் என்று எனக்கு தெரிய வந்திருக்கின்றது. அது மிகவும் விரிவைக் கொண்டதாக இருக்கும். அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஆம்; இது உண்மைதான்.

ஆனால் இதையும் கேட்டுக் கொள்ளுங்கள். எனக்கு பொதுமக்களை விட மிகவும் அதிகமாக உங்களது சமுதாயத்திலுள்ள அன்ஸார் இந்த தடாகத்திலிருந்து நீர் அருந்துவது விருப்பமானதாக இருக்கின்றது என்று கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 822 ஹதீஸ் எண் 27859, முஸ்னது கைலா பின்த் ஹகீம் (ரலி) அவர்கள். 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

அன்ஸார் சகோதரர்களிடம் எத்தகு அன்பு இருந்தது? அதற்கு இது மட்டுமே காரணமாகும். அதாவது அவர்களின் சமுதாயம் அவர்களின் நகரத்தை விட்டு அவர்களை வெளியேற்றியபோது அன்ஸார்கள் சகோதரர்கள்தான் அவர்களுக்காக தம்மிடமிருந்த அனைத்தையும் அர்ப்பணித்தனர். வரலாற்றில் பத்ர் போர் தொடர்பாக இந்த ஓர் அறிவிப்பும் கிடைத்திருக்கின்றது. அதாவது ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் புகழ்பெற்ற பத்ர் போர் நடைபெற்றது. பத்ர் போரின்போது நிராகரிப்பவர்களின் தரப்பிலிருந்து அஸ்வது பின் அப்தில் அஸது மஹ்ஸூமி என்ற மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடிய தீய நபர் ஒருவர் வந்தார். நான் கண்டிப்பாக ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தடாகத்திலிருந்து அதாவது முஸ்லிம்கள் நீர் அருந்துகின்ற இடத்திலிருந்து தண்ணீர் குடிப்பேன் அல்லது அதை மோசமானதாக ஆக்கி விடுவேன். அல்லது அதற்கு அருகிலேயே மரணித்து விடுவேன் என்று அவர் உடன்படிக்கை செய்திருந்தார்.

அவர் இந்த எண்ணத்துடன் புறப்பட்டார். அப்துல் முத்தலிப் அவர்களின் மகனான ஹம்ஸா (ரலி) அவர்கள் அவரை எதிர்த்து நின்றார்கள். இவர்கள் இருவரும் நேரடியாக சந்தித்தபோது ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் வாளினால் தாக்குதல் நடத்தி அவரது கால் விரல்களில் பாதியை வெட்டி எறிந்து விட்டார்கள். அவர் தடாகத்திற்கு அருகில் இருந்தார். இடுப்பு புரட்டப்பட்டிருக்கும் நிலையில் அவர் விழுந்தார். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். இன்னொரு தாக்குதல் நடத்தி ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அவரை அழித்து விட்டார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 298,299 பாடம்: மக்தல் அல் அஸ்வது பின் அப்துல் அஸது அல் மஹ்ஸூமி. 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

அவர் தடாகத்திற்கு அருகில் சென்று மரணித்து விட்டார். ஆனால் நான் தண்ணீர் குடிப்பேன் அல்லது அதை மோசமாக்கி விடுவேன் என்று அவர் கூறியதை அவரால் செய்ய முடியவில்லை.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பத்ர் போர் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த போரில் நிராகரிப்பவர்களின் எண்ணிக்கை முஸ்லிம்களைவிட மிகவும் அதிகமாக இருந்தது. இரவு முழுவதும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவன் முன்னிலையில் பணிவுடன் துஆக்கள் செய்வதிலும் இறைவனிடம் மன்றாடுவதிலும் ஈடுபட்டிருந்தார்கள். நிராகரிப்பவர்களின் படை எங்களுக்கு அருகில் வந்ததும், மேலும் நாங்கள் அவர்களுக்கு முன்னால் அணி திரண்டு நின்றதும், திடீரென்று ஒரு நபர் மீது பார்வை விழுந்தது. அவர் சிறப்பு நிற ஒட்டகத்தில் வந்து கொண்டிருந்தார். மக்களுக்கு நடுவில் அவரது சவாரி சென்று கொண்டிருந்தது.

ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள், நிராகரிப்பவர்களுக்கு அருகில் நின்று கொண்டிருக்கும் அலியே! ஹம்ஸாவே! என்று குரல் கொடுத்து அழைத்தவாறு சிவப்பு ஒட்டகத்தில் வருபவர் யார் என்று கேட்பீர்களாக; அவர் என்ன சொல்கின்றார்? என்று கூறினார்கள்.

பிறகு ஹுஸூர் (ஸல்) அவர்கள் எவராவது இம்மக்களில் நன்மை மற்றும் நல்லவை தொடர்பாக அறிவுரை கூறுபவர் இருக்கின்றார் என்றால் அவர் சிவப்பு ஒட்டகத்தில் இருக்கின்ற நபர் ஆவார் என்று கூறினார்கள்.

இந்த தருணத்தில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அங்கு வந்து, அது உத்பா பின் ரபீஆ ஆவார். நிராகரிப்பவர்கள் சண்டையிடுவதிலிருந்து இவர் அவர்களை தடுத்து நிறுத்துகின்றார். இதற்கு பதில் கூறும் வகையில் அபூஜஹில், நீங்கள் கோழைகளாக இருக்கின்றீர்கள். போர் செய்வதற்கு நீங்கள் அஞ்சுகின்றீர்கள் என்று கூறினான். அப்போது உத்பா பொங்கி எழுந்தவாறு இன்று கோழை யார் என்று பார்த்து விடுவோம் என்று கூறினார்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 338,339 ஹதீஸ் எண் 948, முஸ்னது அலி பின் அபி தாலிப், 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உத்பா பின் ரபீஆ அவர்களும் அவருக்கு பின்னால் அவரது மகனும் சகோதரனும் வந்து குரல் கொடுத்து அழைத்தவாறு யார் எங்களை எதிர்த்து நிற்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றார் என்று கேட்டனர். அன்ஸார் சகோதரர்களின் பல இளைஞர்களும் அதற்கு பதில் கூறினர். நீங்கள் யார்? என்று உத்பா கேட்டார். அதற்கு அவர்கள் நாங்கள் அன்ஸார்களில் ஒருவராக இருக்கின்றோம் என்று பதில் கூறினர்.

அதற்கு உத்பா, உங்களுடன் எங்களுக்கு எந்த தொடர்பும் கிடையாது. நாங்கள் எங்களது சிறிய தந்தையின் மகன்களுடன் போர் செய்யும் எண்ணமுடையவர்களாக இருக்கின்றோம் என்று கூறினர். அப்போது நபி கரீம் (ஸல்) அவர்கள் ஹம்ஸாவே எழுந்திருங்கள்! அலியே எழுந்து நில்லுங்கள்! உபைதா பின் ஹாரிஸே! முன்னேறிச் செல்லுங்கள் என்று கூறினார்கள். ஹம்ஸா (ரலி) உத்பாவின் பக்கம் முன்னேறிச் சென்றார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஷய்பாவின பக்கம் முன்னேறிச் சென்றேன். உபைதா மற்றும் வலீதுக்கிடையில் சண்டை நடந்தது. பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரை மிகக் கடுமையாக காயப்படுத்தினர். பிறகு நாங்கள் வலீதின் பக்கம் கவனம் செலுத்தினோம். அவனைக் கொன்றோம். பிறகு உபைதா அவர்களை போர்க்களத்திலிருந்து தூக்கிக் கொண்டு வந்தோம். (சுனன் அபூதாவூத், கிதாபுல் ஜிஹாது, ஹதீஸ் எண் 2665)

அலி மற்றும் ஹம்ஸாவாகிய இவர்கள் இருவரும் தத்தமது எதிரிகளைக் கொன்றனர். ஹம்ஸாவே! எழுந்திருங்கள் என்றும் அலியே! எழுந்து நில்லுங்கள். உபைதா பின் ஹாரிஸே முன்னேறிச் செல்லுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டு அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் மூவரும் எழுந்து நின்றவாறு உத்பாவின் பக்கம் முன்னேறிச் சென்றபோது உத்பா கொஞ்சம் பேசுங்கள். அதன் மூலம் நாம் உம்மை அடையாளங்கண்டு கொள்வோம் என்று கூறினான். ஏனென்றால், அவர்கள் கவசம் அணிந்திருந்தனர். அவர்களின் முகம் மூடப்பட்ட நிலையில் இருந்தது. அந்த சமயத்தில் ஹம்ஸா அவர்கள், நான் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் சிங்கமாக இருக்கின்ற ஹம்ஸா ஆவேன் என்று கூறினார்கள். அப்போது உத்பா சிறந்த போட்டியாளர் என்று கூறினார்.

(அல்திப்காத்தில் குப்ரா தொகுதி 2 பக்கம் 12. 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்பில் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹம்ஸாவின் வீரத்தின் நிலைமை எவ்வாறிருந்தது என்றால் பத்ர் போரில் எதிரிகளிடம் பீதியை ஏற்படுத்துவதற்காக அவர்கள் தீக்கோழியின் சிறகுகளைப் போரின் அடையாளச் சின்னமாக அவர்கள் அணிந்திருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உமய்யா பின் ஹல்ஃப் குரைஷியர்களின் தலைவர்களில் ஒருவராக இருந்தார்கள். உமைய்யா, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை துன்புறுத்தி வந்தவர் ஆவார். பத்ர் போரில் அன்ஸார் சகோதரர்களின் கைகளால் அவர் கொல்லப்பட்டார். அவன் என்னிடம் எவரது நெஞ்சத்தில் தீக்கோழியின் சிறகு பொருத்தப்பட்டிருக்கின்றதோ அவர் யார்? என்று என்னிடம் கேட்டான். அதற்கு நான் இது ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் ஆவார்கள் என்று கூறினேன். அப்போது உமய்யா, இந்த நபர்தான் இன்று எங்களுக்கு எல்லாரையும் விட அதிகமாக இழப்பை ஏற்படுத்தியவர் ஆவார் என்று கூறினான்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 302, மக்தல் அமய்யா பின் ஹல்ஃப் என்ற பாடம், 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸ்மில் அச்சிடப்பட்டது)

ஆங்கிலேய வரலாற்றாசிரியரான சர் வில்லியம் மூர் அவர்கள் பத்ர் போர் தொடர்பாகவும் அதில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் இருந்தது பற்றியும் இவ்வாறு எழுதுகின்றார்: ஹம்ஸா பறக்கின்ற நிலையில் தீக்கோழியின் சிறகுகளுடன் எல்லா இடங்களிலும் பெரிதாக தென்பட்டார்கள்.

(The Life of Mohammad by sir William Muir, heading Battle of Ohod pg 260 Edition 1923)

இன்னும் பலரையும் அவர்கள் போரில் கொன்றார்கள். உஹது போரிலும் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் தமது வீரத்தின் சிறப்புகளைக் காட்டினார்கள். அவர்களது இந்த வீரமானது குரைஷியர்களின் கண்களை உறுத்திக் கொண்டு இருந்தது. புகாரியில் இது பற்றிய விபரம் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் ஜாஃபர் பின் அம்ர் பின் உமைய்யா ஸமரி அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் உபைதுல்லாஹ் பின் அதி பின் ஹியார் அவர்களுடன் பயணத்தில் சென்றேன். சிரியான நாட்டின் புகழ்பெற்ற நகரமான ஹுமூஸை நாங்கள் சென்றடைந்ததும் உபைதுல்லாஹ் பின் நகி அவர்கள் என்னிடம், நீங்கள் வஹ்ஸி பின் ஹரப் ஹப்ஷி அவர்களை சந்திக்க விரும்புகின்றீர்களா என்ன? என்று கேட்டார். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக அவர்களிடம் கேட்க வேண்டும் என்று கூறினோம். அதற்கு அவர், வஹ்ஸி ஹுமுஸில் இருந்து வந்தார். பிறகு நாங்கள் அவரது முகவரியைக் அவரிடம் கேட்டோம். அதற்கு அவர், அவர் தனது மாளிகையின் நிழலில் அமர்ந்திருப்பார் என்று எங்களிடம் கூறினார்.

ஜஃபர் அவர்கள் கூறுகின்றார்கள். நாங்கள் அவரிடம் சென்று சிறிது நேரம் வரை நின்று கொண்டிருந்தோம். நாங்கள் அவருக்கு ஸலாம் கூறினோம். அவர் ஸலாத்திற்கு பதில் கூறினார்.

உபைதுல்லாஹ் அவர்கள் தலைப்பாகை அணிந்திருந்தாள். மேலும் தனது தலையையும் முகத்தையும் துணியால் மூடியிருந்தார்கள். வஹ்ஸியால் அவர்களது கண்களையும் கால்களையும் மட்டுமே பார்க்க முடிந்தது. உபைதுல்லாஹ் அவர்கள், வஹ்ஸியே! என்னை நீ அடையாளங்கண்டு கொண்டாயா? என்று கேட்டார்கள்.

அப்போது வஹ்ஸி, இறைவன் மீது ஆணையாக! இல்லை. இந்த அளவு மட்டுமே எனக்கு தெரியும். அதாவது அதீப் பின் ஹியார் ஒரு பெண்ணை திருமணம் செய்தார். அவரை உம்மு கிதால் பின்த் அவீலீஸ் என்று அழைக்கப்பட்டார். மக்காவில் அவருக்கு குழந்தை பிறந்தது.

நான் அவருக்கு பால் அருந்த கொடுத்து வந்தேன். மேலும் குழந்தையை தூக்கிக் கொண்டு அவனது தாயுடன் அவனை அழைத்துச் சென்றேன். நான் உனது கால்களைப் பார்த்தேன். அதன் மூலமாக குழந்தையாக இருந்த அந்த நபரேதான் இப்போது இங்கு வந்துள்ளீர்கள் என்று கூறினார். இதைக் கேட்ட உபைதுல்லாஹ் தனது முகத்தை திறந்து காட்டினார். அதாவது கால்கள் மூலமாக வஹ்ஸி அவரை அடையாளம் கண்டு கொண்டார்.

பிறகு உபைதுல்லாஹ் அவர்கள் தனது முகத்திலிருந்த துணியை அகற்றி, வஹ்ஸியிடம் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட அந்த சம்பவம் தொடர்பாக எங்களுக்கு கூறு என்றார்கள். அதற்கு அவர் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் பத்ர் போரில் தொய்மா பின் அதீல் பின் ஸியார் அவர்களை கொன்றார்கள். அப்போது எனது எஜமானரான ஜபீர் பின் முத்இம் என்னிடம், நீங்கள் எனது சிறிய தந்தைக்கு பகரமாக ஹம்ஸாவை கொலை செய்தால் நான் உன்னை விடுவித்து விடுவேன் என்று கூறினார்.

உஹது போர் நடக்க இருக்கின்றது என்பதை மக்கள் பார்த்தபோது ஹய்னைன் உஹதின் மக்களில் ஒரு மலையாக இருந்தது. உஹதிற்கும் இதற்கும் இடையில் ஒரு பள்ளத்தாக்கு. நானும் மக்களுடன் சேர்ந்து போர் புரிவதற்காக புறப்பட்டேன். மக்கள் போர் புரிவதற்காக அணியாக நின்றபோது சிபா போர்க்களத்தில் நின்றவாறு எவராவது என்னை எதிர்த்து போரிடுவதற்கு மைதானத்திற்கு வருவாரா? என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் அப்துல் முத்தலிபின் மகனான ஹம்ஸா அவனை எதிர்த்து போரிடுவதற்காக வந்தார்கள். ஷய்யாவை பார்த்து, நீ அல்லாஹ்வையும் அவனது தூதர் (ஸல்) அவர்களையும் எதிர்த்து போரிடுகின்றாயா என்ன? என்று கேட்டார்கள். இதைக் கூறி விட்டு ஹஸ்ரத் ஹம்ஸா அவனை தாக்கினார்கள். அவன் அங்கேயே மரணித்து விட்டான். தனது பிடியில் அவனை கொண்டு வந்து அன்னார் அவனை கொன்று விட்டார்கள்.

வஹ்ஸி கூறுகின்றான்: நான் ஒரு பாராங்கல்லுக்குக் கீழே ஹஸ்ரத் ஹம்ஸாவுடன் அமர்ந்திருந்தேன். அவர்கள் எனக்கருகில் வந்ததும் நான் அவர்களை ஈட்டியால் குத்தினேன். அதனை அவர்களது இடுப்பிற்கு கீழே வைத்து வலுவாக அழுத்தியபோது அது அவர்களை கிழித்தவாறு மறுபுறமாக வெளியில் வந்து விட்டது. இதுவே அவர்களின் இறுதி நேரமாக இருந்தது. மக்கள் திரும்பி வந்தபோது நானும் அவர்களுடன் திரும்பி வந்தேன். பிறகு மக்காவில் நான் தங்கியிருந்தேன். எதுவரையென்றால், மக்காவில் இஸ்லாம் பரவியது. பிறகு நான் அங்கிருந்து வெளியேறி தாயிஃபிற்கு சென்று விட்டேன்.

மக்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தமது தூதுவரை அனுப்பி வைத்தனர். அன்னார் அவர்களை எதிர்த்து நிற்க மாட்டார்கள் என்று என்னிடம் கூறப்பட்டது. அதாவது அவர்களை பார்த்து எதுவும் கூறமாட்டார்கள் என்று என்னிடம் கூறப்பட்டது. நானும் அந்த தூதுவர்களுடன் சென்றேன். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நாங்கள் சென்று சேர்ந்ததும் அன்னார் என்னை பார்த்து விட்டு நீ தான் வஹ்ஸியா? என்று கேட்டார்கள். நான் அதற்கு ஆம் என்று பதில் கூறினேன். நீ ஹம்ஸாவை கொலை செய்தாயா? என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான், உங்களுக்கு சரியான விஷயம்தான் கிடைத்திருக்கின்றது என்று நான் கூறினேன்.

பெருமானார் (ஸல்) அவர்கள் உம்மால் முடிந்தால் நீ எனக்கு முன்னால் வர வேண்டாம் என்று கூறினார்கள். இதை கேட்டு விட்டு நான் அங்கிருந்து வெளியேறினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆனபோது முஸைலமா கஸ்ஸாப் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது நான் முஸைலமாவை நோக்கி கண்டிப்பாக செல்வேன். ஒருவேளை நான் அவனை கொலை செய்து விட்டால் இவ்வாறு நான் ஹஸ்ரத் ஹம்ஸாவை கொலை செய்த பாவத்திற்கு பரிகாரம் தேடிக் கொள்வேன் என்று நான் கூறிக் கொண்டேன்.

அவர் கூறுகின்றார்: நானும் மக்களுடன் சேர்ந்து போருக்குச் சென்றேன். பிறகு போரில் நடக்க வேண்டியவை நடந்தன. நான் ஒரு நபர் சுவர் ஓரமாக நிற்பதைப் பார்த்தேன். அவர் கோதுமை நிறத்திலுள்ள ஒட்டகம் போன்று இருந்தார். அவரது தலைமுடி அலங்கோலமாக காட்சியளித்தது. நான் அவரை ஈட்டியால் குத்தி அவரது மார்புக்கு நடுவில் அதை வைத்து வலுவாக அழுத்தினேன். அது இரண்டு தோல்களுக்கும் நடுவில் மறுபுறம் வெளியேறி விட்டது. இதற்குப் பிறகு ஒரு அன்ஸாரியும் அவரது கழுத்தை வெட்டினார். இவ்வாறு அவனது முடிவு இருந்தது.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி பாடம்: கதல் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் ஹதீஸ் எண்4072)

உமைர் பின் இஸ்ஹாக் அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்கின்றார்கள்: உஹது நாளன்று அப்துல் முத்தலிபின் மகனான ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் இரண்டு வாள்கள் மூலமாக போர் புரிந்து கொண்டிருந்தார்கள்.நான் அஸதுல்லாஹ்வாக – அல்லாஹ்வின் சிங்கமாக இருக்கின்றேன் என்று அவர்கள் கூறினார்கள். சில நேரங்களில் அவர்கள் முன்னால் செல்வார்கள். சில நேரங்களில் பின்னால் வந்தார்கள். இதே நிலைமையில் அவர்கள் திடீரென்று வழுக்கி தடுமாறி முதுகு பக்கம் சாய்ந்தவாறு விழுந்தார்கள். அப்போது வஹ்ஸி அஸ்வது அவர்களை பார்த்து விட்டான். வஹ்ஸி, அவர்களை ஈட்டியால் தாக்கி கொன்றான் என்று அபூ உஸாமா அவர்கள் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 8. 1990 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் ஹிஜ்ரத்திற்குப் பிறகு 32 –வது மாதத்தில் உஹது போரில் ஷஹீதானார்கள். அப்போது அவர்களுக்கு வயது 59 ஆகும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 6. 1990 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

அறிவிப்பில் வருகின்றது: அபூ ஸுஃப்யானின் மனைவியான ஹிந்தா உஹது போரின்போது படையுடன் சேர்ந்து வந்தாள். பத்ர் போரில் ஹம்ஸாவை எதிர்த்து நின்று கொல்லப்பட்ட தனது தந்தைக்காக ஹஸ்ரத் ஹம்ஸாவை பழிவாங்குவதற்காக எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் நான் ஹம்ஸாவின் கல்லீரலை கடித்து மென்று விடுவேன் என்று அவள் நேர்ந்திருந்தாள். இந்த நிலைமை ஏற்பட்டு ஹஸ்ரத் ஹம்ஸாவின் மீது துன்பம் வந்த சமயத்தில் இணை வைப்பவர்கள் கொலை செய்யப்பட்டவர்களின் சடலத்தை சிதைத்தனர். மூக்கு, காது போன்றவற்றை வெட்டினர்.

அவர்கள் ஹம்ஸாவின் கல்லீரலின் ஒரு துண்டைக் கொண்டு வந்தனர். ஹிந்தா அதை வாங்கி அதை மென்று கொண்டே இருந்தாள். அதை அவளால் விழுங்க முடியாமல் போனபோது அந்த துண்டை அவள் எறிந்து விட்டாள். இந்த சம்பவம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது அன்னார் அல்லாஹ், ஹம்ஸாவின் மாமிசத்திலிருந்து எதையும் சுவைக்க முடியாத அளவுக்கு நெருப்பை நிரந்தரமாக அதன் மீது ஹராமாக்கி விட்டான் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 8. 1990 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸாவின் சடலத்திற்கு அருகில் வந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு அன்னாருக்கு கிடைத்த உயர்வான அந்தஸ்து பற்றி நற்செய்தி கூறியிருந்தார்கள்.

அது தொடர்பாக ஓர் அறிவிப்பு இருக்கின்றது. வரலாற்று நூலான இப்னு ஹிஷாமில் இது பற்றி இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது: ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸாவின் சடலத்தைப் பார்த்த போது அவர்களது கல்லீரலை எடுத்துக் கடித்து மென்றனர் என்பதை அறிந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாரது சலடத்திற்கு அருகில் நின்றவாறு ஹம்ஸாவே! உமக்கு ஏற்பட்ட இந்த துன்பத்தைப் போன்று வேறு எந்தவொரு துன்பமும் எனக்கு ஏற்படாது. இதை விட துன்பத்தை தரக்கூடிய வேறு எந்த ஒரு காட்சியையும் இன்று வரை நான் பார்த்ததில்லை.

மேலும் அன்னார் கூறினார்கள்: ஜிப்ரீல் என்னிடம் வந்து இந்த செய்தியை

தெரிவித்துள்ளார்கள். அதாவது, ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் அவர்கள் குறித்து ஏழு வானங்களிலும் அவர் அல்லாஹ்வின் சிங்கம் என்று எழுதப்பட்டிருந்தது.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 395 பாடம் வகூஃபுன் நபி (ஸல்) அலா ஹம்ஸா வ ஹஸ்னா அலைய்ப. 2009 ஆம் ஆண்டஇ பைரூத்திலுள்ள தார் இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போர் நடைபெற்ற நாளில் ஒரு பெண் முன்னாலிருந்து மிகவும் வேகமாக வந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. விரைவில் அவர் ஷஹீதுகளின் சடலத்தைப் பார்த்து விடலாம் என்ற நிலை இருந்தது. நபி கரீம் (ஸல்) அவர்கள் இதை நல்லது என்று கருதவில்லை. ஒரு பெண் அங்கு வந்து அதை பார்ப்பது சரியல்ல என்று அவர்கள் கருதினார்கள். ஏனென்றால், சடலங்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. எனவே, அன்னார் இந்த பெண்ணைத் தடுத்து நிறுத்துங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கவனமாகப் பார்த்தபோது அது எனது தாயரான ஸபியா (ரலி) என்று எனக்கு தெரிய வந்தது. நான் அவர்களிடம் ஓடிச் சென்றேன். ஷஹீதுகளின் சடலங்கள் வரை அவர்கள் சென்று சேர்வதற்கு முன்னதாகவே நான் அவர்களுக்கு அருகில் சென்று விட்டேன். அவர்கள் என்னை பார்த்து விட்டு எனது நெஞ்சத்தில் குத்தியவாறு என்னை பின்னால் தள்ளி விட்டார்கள். அவர்கள் மிகவும் வலுவான ஒரு பெண்ணாக இருந்தார்கள்.

அவர்கள் விலகிச் செல்வீராக. நீர் கூறுகின்ற எந்த விஷயத்தையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று என்னிடம் கூறினார்கள். அப்போது நான் அவர்களிடம் நபி கரீம் (ஸல்) அவர்கள் உங்களை தடுத்து நிறுத்துமாறு கூறினார்கள் என்று கூறினேன். இதைக்கேட்டு உடனடியாக அவர்கள் அங்கேயே நின்று விட்டார்கள். தன்னிடமிருந்த இரண்டு துணிகளை வெளியில் எடுத்து இந்த இரண்டு துணிகளை நான் எனது சகோதரரான ஹம்ஸாவிற்காக கொண்டு வந்துள்ளேன். அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற செய்தி எனக்கு கிடைத்தது என்று அவர்கள் கூறினார்கள்.

இதுதான் அந்த காலத்தில் அவர்களின் கட்டுப்படுதலாக இருந்தது. மிகவும் துக்கத்தின் நிலைமையில் அவர்கள் இருந்தும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள் என்பதை கேட்டதும் உடனடியாக அவர்கள் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரை கேட்டதும் அவர்கள் அந்த செயலிலிருந்து தன்னை தடுத்துக் கொண்டார்கள். இதுவே முழுமையான கட்டுப்படுதல் ஆகும்.

எனது சகோதரருக்காக நான் இந்த துணிகளைக் கொண்டு வந்துள்ளேன். அவரது ஷஹாதத் பற்றிய செய்தி எனக்கு கிடைத்து விட்டது. நீங்கள் இந்த துணிகளில் அவரை கஃபன் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். நாங்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை இந்த இரண்டு துணிகளால் கஃபன் செய்ய ஆரம்பித்தபோது அவர்களுக்கு பக்கத்தில் ஓர் அன்ஸாரி ஷஹீதாகி வீழ்ந்து கிடப்பதை பார்த்தோம். ஹஸ்ரத் ஹம்ஸாவுடன் நடந்து கொண்டது போன்றே அவரிடமும் எதிரிகள் நடந்து கொண்டனர்.

எனவே, ஹம்ஸா (ரலி) அவர்களை இரண்டு துணிகளினால் கஃபன் செய்து விட்டு பக்கத்திலுள்ள அன்ஸாரி சகோதருக்காக ஒரு துணி கூட கிடைக்காமல் இருப்பதைப் பார்த்து அவ்விடத்தில் நாங்கள் வெட்கத்தை உணர்ந்தோம். இதனால் ஒரு துணியால் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களையும் இன்னொரு துணியால் இந்த அன்ஸாரி சஹாபி அவர்களையும் கஃபன் செய்ய வேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்தோம். நாங்கள் கவனித்துப் பார்த்த போது இந்த இருவரில் ஒருவர் நெட்டையாக இருப்பது தெரிய வந்தது. நாங்கள் சீட்டுக் குலுக்கிப் போட்டு பார்த்து யாருடைய பெயரில் எந்த துணி வந்ததோ அவரை அந்த துணியால் கஃபன் செய்தோம்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 452 ஹதீஸ் எண் 1418. முஸ்னத் ஸுபைர் பின் அல்அவாம் (ரலி). 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை ஒரு துணியினால் மட்டும் கஃபன் செய்தோம். அவர்களது தலையை மூடினால் அவர்களது இரு கால்களை விட்டும் துணி விலகி விடுகின்றது. அவர்களது கால்களின் பக்கம் துணியை இழுத்தால் அவர்களது முகத்திலிருந்து துணி விலகி விடுகின்றது. அதைப் பார்த்த ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களது முகத்தை மறைத்து விடுங்கள். அவர்களது கால்களில் புல்லை வையுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹம்ஸாவும் அவர்களின் சகோதரியின் மகனான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹஜ்ஷ் அவர்களும் ஒரே கபரில் அடக்கம் செய்யப்பட்டனர். நபி (ஸல்) அவர்கள் எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களுக்காக ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 72 ஹதீஸ் எண் 21387. முஸ்னத் ஹபார் பின் அல்அரத் (ரலி). 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸாவின் சடலத்தை முன்னால் வைத்து அவர்களுக்கு ஜனாஸா தொழுகை தொழ வைத்தார்கள். ஓர் அன்ஸாரி சஹாபின் சடலம் அவர்களுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த அன்ஸாரி சஹாபிக்கு ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். பிறகு அந்த அன்ஸாரியின் ஜனாஸா எடுத்துச் செல்லப்பட்டது. ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் சடலம் அங்கேயே வைக்கப்பட்டது. இவ்வாறு அந்த நாளில் மட்டும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏனைய ஷஹீதுகளுடன் சேர்த்து ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களுக்காக 70 முறை ஜனாஸா தொழுகை தொழ வைத்தார்கள். ஏனென்றால், ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் சடலம் அங்கேயே இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 11 ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப். 1990 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் தமது உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதிலும் நன்மையான அனைத்து பணிகளைச் செய்வதிலும் எப்போதும் முன்னணியில் இருந்து வந்தார்கள்.

அவர்கள் ஷஹீதான பிறகு அன்னாரது சடலத்தைப் பார்த்து பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் கருணை உங்கள் மீது உண்டாகட்டுமாக. உறவினர்களுடன் இந்த அளவு நல்ல முறையில் நடந்து கொள்கின்ற மற்றும் நன்மைகள் செய்கின்ற வேறு ஒருவர் இருப்பார் என்று எனக்கு தெரியவில்லை. இதற்குப் பிறகு உங்கள் மீது எந்த துக்கமும் இல்லை என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 9 ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப். 1990 ஆண் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிட்டப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகவும் முஸ்லிம்களின் வீரமிக்க தலைவராகவும் இருந்த ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் அடக்கம் எத்தகைய கஷ்டமான நிலையில் ஆதரவற்ற சூழலில் செய்யப்பட்டிருக்கின்றது என்றால் சஹாபாக்கள் மிகவும் துக்கத்துடன் இதைப் பற்றி எடுத்துக் கூறி வந்தனர். செழிப்பான காலக்கட்டத்தில் ஹஸ்ரத் கப்பாப் அவர்கள் அந்த கஷ்டமான காலக்கட்டதை நினைவு கூர்ந்தவாறு ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் கஃபனாக ஒரு போர்வைதான் இருந்தது. அதனால் அவர்கள் தலை மறைக்கப்பட்டு கால்களில் புற்கள்

போடப்பட்டன. (முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 71,72 ஹதீஸ் எண் 21387. முஸ்னத் ஹபார் பின் அல்அரத் (ரலி). 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் சம்பவமும் இது போன்றதேயாகும். ஒருமுறை அவர்கள் நோன்பு வைத்திருந்தார்கள். நோன்பு திறக்கின்ற சமயத்தில் மிகவும் சுவையான உணவு அவர்களுக்காக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவர்களுக்கு அந்த கஷ்டமான காலக்கட்டம் நினைவில் வந்து விட்டது.

அவர்கள் கூறினார்கள்: ஹம்ஸாவும் ஷஹீதானார். அவர்கள் என்னை விட சிறந்தவராக இருந்தார்கள். கஃபன் செய்வதற்காக அவர்களுக்கு போர்வை கூட கிடைக்காமல் இருந்தது. பிறகு நமக்காக உலகில் வசதியான நிலைமைகள் ஏற்பட்டன. உலகில் நமக்கு கிடைக்க வேண்டியது கிடைத்து விட்டது. ஆனால், நமது நன்மைகளுக்கான நற்கூலி ஒருவேளை விரைவாக கொடுக்கப்பட்டு விட்டதோ அதாவது உலகிலேயே அது கிடைத்து விட்டதோ என்ற அச்சம் எனக்கு இருக்கின்றது என்று அவர்கள் கூறினார்கள். பிறகு அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். எந்த அளவு அழுதார்கள் என்றால் உணவு உண்பதை அவர்கள் விட்டு விட்டார்கள்.

(சஹீஹ் புஹாரி, கிதாபுல் மகாஸி, உஹது போர் பற்றிய பாடம், ஹதீஸ் எண் 4045)

இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அல்லாஹ் இவர்களிடம் திருப்தி அடைந்தான். அவர்கள் அல்லாஹ்விடம் திருப்தி அடைந்தனர். வசதியான நிலைமை வந்தபோது அவர்கள் தமது சகோதரர்களை நினைவு கூர்ந்து வந்தனர். தற்போதைய நிலைமையையும் கடந்த கால நிலைமையையும் அவர்கள் தங்கள் கண் முன் நிறுத்தினார்கள்.

அல்லாஹ் இவர்கள் அனைவரையும் மன்னிப்பானாக. அல்லாஹ் இவர்கள் தொடர்பாக இவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்ற நற்செய்தியையும் வழங்கி இருந்தான். அல்லாஹ் இவர்களின் தகுதிகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரிலிருந்து திரும்பி வந்த போது அன்ஸாரைச் சேர்ந்த ஒரு பெண்மணி தனது கணவனின் மரணத்தினால் அழுகின்றாள் என்று கேள்விப்பட்டார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹம்ஸாவிற்காக அழ எவருமே இல்லையா? அன்ஸார் பெண்களுக்கு இது பற்றி தெரிய வந்த போது அவர்கள் ஹம்ஸாவின் ஷஹாதத்திற்காக அழ ஒன்று கூடினர். பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூங்கி விட்டார்கள். பிறகு கண் விழித்த போது அந்த பெண்கள் அழுது கொண்டிப்பதைக் கண்டார்கள்.

அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹம்ஸாவின் பெயரினால் இன்று அழுது கொண்டே இருப்பீர்களா என்ன? அவர்களை வீடுகளுக்கு போகச் சொல்லுங்கள் என்று கூறினார்கள். அப்போது அவர்களிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தத்தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்லுங்கள். இன்றிலிருந்து எவருடைய மரணத்திற்காகவும் தொடர்ச்சியாக அழக்கூடாது என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 418,419 ஹதீஸ் எண் 5563. முஸ்னத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி). 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

இவ்வாறே ஆண்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூச்சடுவதை, ஒப்பாரி வைப்பதையும் தடை செய்தார்கள். நுட்பத்துடன் அன்னார் அன்ஸார் பெண்களின் உணர்வுகளை கருத்தில் கொண்டார்கள். அவர்களது கணவர் அல்லது சகோதரரின் பிரிவின் போது அவர்கள் கூச்சலிடுவதை தடுப்பதற்கு பகரமாக அவர்களுடைய கவனத்தை ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் பக்கம் திருப்பினார்கள். சமுதயாத்தின் மிகப்பெரிய துக்கத்தின் பக்கம் அவர்களது கவனத்தை திருப்பினார்கள்.

அந்த துக்கமானது எல்லாவற்றையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துக்கத்தை தரக்கூடியதாக இருந்தது. மேலும் ஹம்ஸா அவர்களின் மீது ஒப்பாரி வைப்பது போன்ற காரியங்களை செய்யக் கூடாது என்று கூறிவாறு தனது முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். அவர்களிடம் பொறுமையை மேற்கொள்ளுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் பிரிவின் துக்கமானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடைசி வரை இருந்தது.

கஅப் பின் மாலிக் அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் ஷஹாதத் பற்றி கூறினார்கள்.

என்னுடைய கண்கள் கண்ணீர் வடிக்கின்றது. மேலும் ஹம்ஸா அவர்களின் மரணத்திற்காக அழுவது அவர்களின் உரிமையாகவே இருந்தது. ஆனால் இறைவனின் சிங்கமான அவர்களின் மரணத்திற்காக அழுவதாலோ, புலம்புவதாலோ அல்லது கூச்சலிடுவதாலோ என்ன பயன் ஏற்படப் போகின்றது? எந்த நாளில் இறைவின் சிங்கம் ஹம்ஸா அவர்கள் எந்த நாளின் காலைப்பொழுதில் ஷஹீதானார்களோ அன்று உலகமே, ஷீஹது என்பவர் இந்த ஆண்மகனே ஆவார் என்று கூறியது.

(அஸதுல் காப தொகுதி 2 பக்கம் 69 ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரலி). 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ் இந்த சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே இருப்பானாக. அவர்கள் செய்த தியாகத்தின் உதாரணங்களை உலகம் இருக்கின்ற வரை முஸ்லிம்கள் நினைவில் வைப்பார்களாக. அவர்கள் நிலைநாட்டிய அழகிய முன்மாதிரிகள் மற்றும் அவர்கள் நமக்கு செய்து காட்டிய நன்மைகள் ஆகியவற்றை செய்வதற்கான நற்பாக்கியத்தை இறைவன் நமக்கு வழங்குவானாக.

---

*(10 வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

மூன்று மாதங்கள் வரை தாங்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி எதுவுமே தெரிவிக்காமல் இருந்தால் பிறகு இறைவனுடைய அருள் எவ்வாறு கிடைக்கும்? எதுவுமே செய்யாமல் இறைவனுடைய அருள் கிடைக்க முடியாது. நீங்கள் ஜமாஅத்தின் தலைவர்களாக இருக்கின்றீர்கள். அமீர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் உலகப் பணிகளில் எந்த அளவிற்கு ஈடுபடுகின்றீர்களோ அந்த அளவிற்கு மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. **அவ்வாறு உங்களால் பணி செய்ய முடியவில்லை என்றால், எங்களால் இந்த பொறுப்பை வகிக்க முடியவில்லை என்று நீங்கள் வருத்தம் தெரிவித்து விட்டு சென்றிருக்கலாம்.**

**நான் கேட்பது என்னவென்றால், நீங்கள் ஏன் பாவிகளாக ஆகின்றீர்கள்? ஒன்று, நீங்கள் பணி செய்வதும் இல்லை. பிறகு அல்லாஹ்வின் முன்னிலையில் நீங்கள் பாவிகளாகவும் ஆகி விடுகின்றீர்கள். பெரும்பாலான ஜமாஅத் தலைவர்கள் தொடர்பாக எனக்கு இந்த அறிக்கைதான் கிடைக்கின்றது. அதாவது எவ்வாறு பணி செய்ய வேண்டுமோ அவ்வாறு அவர்கள் செய்வதில்லை.** இத்தகைய வழிமுறை சரியே அல்ல. இதன் காரணமாக மக்கள் மத்தியில் புகார்கள் எழுகின்றன. நீங்களும் பணி செய்வதில்லை. தேசிய செயற்குழுவில் உள்ளவர்களும் பணி செய்வதில்லை. மரணித்த பிறகு அல்லாஹ் உங்களிடம் இது தொர்பாக கேள்வி கேட்பான்.

நீங்கள் ஜமாஅத்தின் தலைவராக இருந்தீர்கள். நீங்கள் இந்த பணியை ஏன் செய்யவில்லை? அப்போது நீங்கள் ஜமாஅத்தினுடைய செயற்குழு இந்த பணியைச் செய்யவில்லை என்று பதில் கூற முடியாது. ஏனென்றால் ஜமாஅத்தின் செயற்குழுவும் இறைவனிடம் பதில் கூற வேண்டியது இருக்கும். மண்டல அமீர்மார்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் தொடர்பாக இறைவனிடத்தில் பதில் கூற வேண்டியது இருக்கும். எனவே ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தனது கணக்கை இறைவன் முன்னிலையில் வைக்க வேண்டியது இருக்கும்.

*(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)*

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)

**ஜெர்மனியின் தேசிய செயற்குழு கூட்டம்:**

நிகழ்ச்சிக்கேற்ப மாலை சரியாக 6:15 மணிக்கு ஹுஸூர் அவர்கள் பள்ளிவாயிலை ஒட்டியிருந்த ஹாலுக்கு வருகை தந்தார்கள். இங்கு ஜெர்மனி ஜமாஅத்தின் தேசிய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் எல்லா உள்ளூர் அமீர்மார்களும், மண்டல அமீர்மார்களும், எல்லா ஜமாஅத்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். ஹுஸூர் அவர்கள் இந்த கூட்டத்தை துஆ செய்து தொடங்கி வைத்தார்கள்.

துஆவிற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, ஜெர்மனி ஜமாஅத்தின் பொதுச் செயலர் இவ்வாறு கூறினார்: 193 தலைவர்களும், 71 ஹல்காக்களின் தலைவர் –களும் ஜெர்மனி ஜமாஅத்தில் இருக்கின்றனர். அவர்களில் 5 பேர் மட்டும் இந்த கூட்டத்திற்கு வர முடியாததற்கு வருத்தத்தைத் தெரிவித்தவாறு மன்னிப்பு கேட்டிருக்கின்றனர். மற்ற அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர் என்று அவர் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கு தெரிவித்தார்.

**பொதுச் செயலர்:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜெர்மன் ஜமாஅத்தின் பொதுச் செயலரிடம் கேட்டதற்கு இணங்க அவர் இந்த அறிக்கையை சமர்ப்பித்தார். அதாவது 140 ஜமாஅத் தலைவர்கள் அறிக்கைகளை முறையாக தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கின்றார்கள். எவர்கள் அதிகமாக அனுப்பாமல் இருக்கின்றார்களோ அவர்களுக்கு கடிதம் எழுதப்படுகின்றது. அதாவது உங்களது அறிக்கை எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று அவர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது. அவர்களிடம் இருந்து பதில் வரவில்லை என்றால் மீண்டும் அவர்களுக்குக் கடிதம் எழுதப்படுகின்றது.

**இதைக் கேட்டுவிட்டு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

எந்த ஜமாஅத் தலைவர்கள் இந்த அளவு சோம்பேறிகளாக இருக்கின்றார்களோ அவர்கள் தொடர்பாக நீங்கள் ஏன் தலைமையகத்திற்கு அறிக்கை அனுப்புவதில்லை? அதற்கு பொதுச் செயலர் இவ்வாறு பதில் கூறினார்கள்: இதுவரை அவர்கள் தொடர்பாக எந்தவொரு அறிக்கையையும் தலைமையகத்திற்கு நான் அனுப்பவில்லை.

**இதைக் கேட்டதும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

நீங்கள் அவர்கள் தொடர்பாக அறிக்கையை அதாவது அவர்கள் தொடர்ந்து அறிக்கை அனுப்புவதில்லை என்ற விஷயத்தை தலைமையகத்திற்கு தெரிவிக்காமல் இருந்தால் நீங்களும் சோம்பேறியாகவே கருதப்படுவீர்கள். அந்த அனைத்து ஜமாஅத் தலைவர்களையும் நீங்கள் சுதந்திரமாக விட்டு வீட்டீர்கள். அவர்களை அமைதியாக இருக்க விட்டு விட்டீர்கள். ஆனால் உங்களுடைய பணி என்னவென்றால், நீங்கள் அவர்களைப் பின்தொடர்ந்து இதைப் பற்றிக் கேட்டுக் கொண்டே இருந்திருக்க வேண்டும். அதைப் பற்றிய அறிக்கையை தலைமையகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

இதற்கு பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் ஜெர்மனி ஜமாஅத்தின் பொதுச் செயலர் ஜெட்சன் பர்க் ஜமாஅத்துடைய அமாரத்திலிருந்து அறிக்கை கிடைக்கவில்லை என்று கூறினார்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்ட பிறகு அவர் இதனைத் தெரிவித்தார். ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜெட்சன் பர்க் ஜமாஅத்தின் உள்ளூர் அமீர் சாஹிபிடம் கூறினார்கள்:

இவ்வாறு அறிக்கை வராததற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். அதற்கு ஜெட்சன்பர்க் ஜமாஅத்துடைய அமீர் சாஹிப் அவர்கள், எங்கள் ஜமாஅத்துடைய பொதுச் செயலர் தரப்பிலிருந்து இந்த பலவீனம் வெளிப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு நாங்கள் இது தொடர்பாக அவருக்கு எடுத்துக் கூறினோம். சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டது. கடந்த மாதத்திலிருந்து மீண்டும் நாங்கள் அறிக்கையை அனுப்ப ஆரம்பித்து விட்டோம் என்று கூறினார்கள். மேலும் பொதுச் செயலர் அவர்கள் சில நாட்களாக உடல் நலம் இல்லாமல் இருந்தார் என்றும் கூறினார்கள்.

**அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:**

பொதுச் செயலர் உடல் நலம் இல்லாமல் இருந்தால் நீங்கள் அங்கு இருக்கத்தானே செய்கிறீர்கள். உண்மையில் இரண்டு மூன்று மாதங்கள் வரை நீங்கள் அந்த பொதுச் செயலரிடம் இது தொடர்பாக கேட்டீர்களா? இல்லையா?

**உங்களைப் போன்றோர் பதவி வகிப்பதை விரும்புகின்றார்கள். பதவியை வாங்கிக் கொண்டு அமர்ந்து விடுகின்றார்கள். நற்காலி கிடைக்க வேண்டும். நாம் தலைவராகவோ அல்லது அமீராகவோ ஆகி விட வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருக்கின்றது. இதன் மூலமாக ஜமாஅத்தில் நமக்கு ஒரு மகிமை கிடைத்து விடும் என்று நோக்கம் மட்டுமே இருக்கின்றது. எனவே இந்த பொறுப்பின் மூலமாக நீங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்ற உணர்வே இருப்பதில்லை. அவ்வாறு நீங்கள் செய்வதுமில்லை.**

**எதுவரை உங்களைப் போன்றோர் தங்களைப் பொறுப்பாளர்களாகக் கருதுகின்றார்களோ அதுவரை இந்த எல்லா தீமைகளும் இருந்து வரும். ஆனால் நீங்கள் உங்களை தொண்டர்கள் என்று எழுத ஆரம்பித்து விட்டால் உங்களைப் போன்றவர்களிடமிருந்து இதுபோன்ற எல்லா தீமைகளும் அகன்று விடும். தலைவர்களிடம் கேட்கும்போது அவர்கள் மண்டல அமீர்மார்கள் எந்த பணியையும் செய்வதில்லை என்று கூறுகின்றார்கள். அமீர்களிடம் கேட்கும்போது அவர்கள் தலைமையகம் எந்த பணியையும் செய்வதில்லை என்று கூறுகின்றார்கள்.**

**இவ்வாறு எல்லாருமே ஒருவர் மற்றவர் மீது பழியைச் சுமத்தக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அல்லது சுமையைப் போடக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் உண்மையில் யாருமே பணி செய்வதில்லை. அதவாது தேசிய மஜ்லிஸ் ஆமிலாவும் பணி செய்யாமல் இருக்கின்றது. அவ்வாறே தலைவர்களும் பணி செய்யாமல் இருக்கின்றார்கள். இதன் காரணமாக மக்கள் மத்தியில் புகார்கள் எழுகின்றன.**

**மக்கள் இவ்வாறு கூறுகின்றனர்: இந்த பொறுப்பாளர்கள் தாங்கள் பெரியவர்கள் என்பதை மட்டுமே வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். எங்களிடம் பொறுப்பு இருக்கின்றது என்று தங்களைப் பெரியவர்களாகக் காட்டுவது மட்டுமே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது அல்லது தங்களுக்கு ஒரு தலைமைப் பதவி கிடைத்திருப்பதை மட்டுமே அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள் என்று மக்கள் கூறுகின்றார்கள். இவர்களிடத்தில் தொண்டு செய்வதற்கான உணர்வு துளி அளவும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள்.**

**முரப்பிகள் இருக்கின்றனர். பெரும்பாலான இடங்களில் அந்த முரப்பிகளோடும் பொறுப்பாளர்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. அவ்வாறே ஜமாஅத்தில் உள்ள நபர்களும் அந்த முபல்லிக்மார்கள் அல்லது முரப்பிகளுடன் சரியான முறையில் நடந்து கொள்வதில்லை. பிறகு இப்படிப்பட்டவர்கள் ஏன் பொறுப்பு வகிக்கின்றனர்? சொற்பொழிவுகளில் நீங்கள் மார்க்கத்திற்கு தொண்டு செய்வதை இறை அருளாகக் கருதுங்கள் என்று கூறுகின்றீர்கள்.**

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

# அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு

தஹ்ரீகே ஜதீதின் தோற்றுனர் ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு பற்றி இவ்வாறு கூறினார்கள்:

“நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்பினால் தஹ்ரீகே ஜதீதிற்கேற்ப செயல்படுங்கள். தஹ்ரீகே ஜதீதிலிருந்து பயன் பெற விரும்பினால் நோன்புகளிலிருந்து சரியான பயனைப் பெற வேண்டும். தஹ்ரீகே ஜதீது என்பது எளிமையான வாழ்க்கையை வாழ்வதும் உழைப்புடனும் கஷ்டங்களைச் சகிப்பதும் தியாகம் செய்வதற்கு தன்னைத்தானே பழக்கப்படுத்திக் கொள்வதும் ஆகும். இந்தப் பாடத்தை உங்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே ரமலான் வந்திருக்கின்றது. எனவே, எந்த நோக்கத்திற்காக ரமலான் வந்துள்ளதோ, அந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள்..... ஒவ்வொரு நபரும் அவரது ரமலான் தஹ்ரீகே ஜதீதுடையதாகவும் அவரது தஹ்ரீகே ஜதீது ரமலானுடையதாகவும் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ரமலான் நமது நஃப்ஸை அழிக்கக் கூடியதாகவும் தஹ்ரீகே ஜதீது நமது ஆன்மாவிற்கு புத்துணர்வூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

எனவே, நான் ரமலானிலிருந்து பயனடையுங்கள் என்று கூறும்போது நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ரமலானின் ஒளியில் புரிந்து கொள்ளுங்கள் என்பதையே உண்மையில் நான் உங்களுக்குப் புரிய வைத்துள்ளேன். தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறும்போது வேறு சொற்களில் நான் உங்களுக்கு நீங்கள் எல்லா நிலையிலும் ரமலானின் நிலைமையை உங்களிடம் ஏற்படுத்துங்கள் என்றே கூறுகின்றேன். சரியான தியாகத்தை தொடர்ந்து செய்கின்ற பழக்கத்தை உங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ரமலான் உண்மையான தியாகம் இல்லாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது ரமலான் அல்ல. மேலும் எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவிற்கு புத்துணர்ச்சியூட்டாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல.”

(ஜுமுஆ குத்பா 4 நவம்பர் 1938)

இது தொடர்பாக 11 நவம்பர் 1938 அன்று நிகழ்த்திய குத்பா பேருரையின் இறுதியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்திடம் தஹ்ரீகே ஜதீதிற்காக சந்தா செலுத்துபவருக்கு குறிப்பாக துஆ செய்யுமாறு வேண்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

“ரமலானின் இறுதிப் பத்து நாட்கள் வரவிருக்கின்றது. இந்த நாட்களை தஹ்ரீகே ஜதீது தொடர்பாக செய்யப்பட்டுள்ள கடந்த கால தியாகங்களுக்காக நன்றி செலுத்துவதற்கும் இனி வருங்காலத்தில் ஆற்றலைப் பெறுவதற்காகவும் செலவிடுங்கள். எவர்களுக்கு கடந்த வருடங்களில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றதோ அவர் இதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள். துஆ செய்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ்விடம் தியாகம் செய்கின்ற ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்ய வேண்டும். அதாவது, மார்க்கத்தின் எழுச்சிக்காகவும் இயக்கத்தின் வலிமைக்காகவும் செய்த தியாகத்தின் விளைவாக அல்லாஹ் அவர் மீது தனது அருளையும் கருணையையும் இறக்க வேண்டும். எத்தகைய கலப்பற்ற மனத்தூய்மையுடனும் அன்புடனும் அவர் இறைவனின் வழியில் தியாகம் செய்தாரோ அதற்கேற்ப அவர் மீது தனது அன்பையும் அருள்களையும் இறக்குவாயாக! ஆமீன் என்று துஆ செய்ய வேண்டும்.”

(அல் ஃபஸ்ல் 15 நவம்பர் 1938, பக்கம் 4)

ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் ஆரம்பத்திலிருந்தே இதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதாவது அவர்கள் எப்போதும் ரமலானின் முதல் பதினைந்து நாட்களுக்குள் தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக அவர்கள் செய்திருந்த வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்தியவாறு அல்லாஹ்வின் அருள்களையும் பரக்கத்துகளையும் ஈர்ப்பதற்கு முயற்சி செய்கின்றனர். எனவே, தஹ்ரீகே ஜதீதிற்கு ஒத்துழைப்பு நல்குகின்ற அனைவரிடமும் அவர்கள் தங்களது மகத்தான ஜமாஅத்தின் மரபுகளை நிலைத்து நிற்கும்படி செய்தவாறு அருளுக்குரிய ரமலானின் 20 –வது நாள் அதாவது ஜூன் 5 ஆம் தேதிக்கு முன்னதாக தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை முழுமையாகச் செலுத்தி ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களிலிருந்து முழுமையான பங்கைப் பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன். *(வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது, காதியான்)*

## உங்களது குழந்தைகளின் சிறந்த தர்பிய்யத்தின் பக்கம் குறிப்பான கவனம் செலுத்துங்கள்

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் கூற்றுகளிலிருந்து...)

**உங்களது குழந்தைகளின் சிறந்த தர்பிய்யத்தின் பக்கம் குறிப்பான கவனம் செலுத்துங்கள். அவர்களிடம் சிறந்த முன்மாதிரியை காட்டுங்கள். இன்னும் சில நாட்களில் புனித ரமலான் மாதம் ஆரம்பமாக உள்ளது இன்ஷா அல்லாஹ். இது நன்மை மற்றும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைவதற்கான சிறந்த வழியாகும். இதில் இறைவணக்கம் மற்றும் நன்மையான பணிகளை செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.**

**எவர்கள் மீது நோன்பு கடமையோ அவர்கள் நோன்பு வைக்காமல் இருப்பதற்கு எந்த சாக்குப் போக்கும் கிடையாது. கடமையான தொழுகைகள் மற்றும் நஃபிலான தொழுகைகளை நிறைவேற்றுங்கள். மேலும் துஆக்களின் பக்கம் அழுத்தம் கொடுங்கள். திருக்குர்ஆனை அதிகம் அதிகமாக ஓதுங்கள். திருக்குர்ஆனை குழந்தைகள் முழுமையாக ஓதும்படி செய்யுங்கள். மேலும் இந்த நல்ல விஷயங்களை புனித ரமலானிற்குப் பிறகும் தொடரச் செய்யுங்கள். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதனை அமல் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.** (பத்ர் வாரப் பத்திரிகை 8 டிசம்பர் 2016 பக்கம் 2)

(அடிஷ்னல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் – தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸி காதியான்)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

தூய்மையாளராக பலர் காணப்படுகிறார்கள்; ஆயினும் அவர்கள் அகத்தில் பாம்புகளாக இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் புறத்திலும் அகத்திலும் ஒன்றாகாதவரை இறைவனிடத்தில் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டீர்கள். பெரியோர்களாக இருந்து சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாக கருதாதீர்கள். நீங்கள் அறிவாளியாக இருந்து அறிவீனர்களுக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையால் அவர்களை அவமானப்படுத்தாதீர்கள். நீங்கள் செல்வந்தர்களாக இருந்து ஏழை எளியவர்களுக்கு உதவி புரியுங்கள்; தன்னலத்தால் அவர்கள் மீது அகங்காரம் கொள்ளாதீர்கள். நாசத்தை விளைவிக்கக் கூடிய வழிகளைக் கண்டு பயப்படுங்கள். இறைவனுக்கு எப்போதும் அஞ்சிக் கொண்டிருங்கள்.

நீங்கள் தக்வா எனும் இறையச்சத்தின்படி செயல்படுங்கள். படைப்பினங்களை ஒருபோதும் வணங்காதீர்கள். உங்கள் எஜமானனாகிய இறைவன் பக்கமே உங்களை தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள். உலக இச்சைகளை விட்டு நீங்கள் ஒதுங்கி விடுங்கள். நீங்கள் அவனுக்காகவே ஆகிவிடுங்கள். மேலும் நீங்கள் அவனுக்காகவே உயிர் வாழுங்கள். அவ்விறைவனுக்காகவே எல்லா விதமான அசுத்தங்களையும் பாவங்களையும் வெறுத்து விடுங்கள். ஏனெனில் அவன் பரிசுத்தமானவனாயிருக்கின்றான்.

நீங்கள் தக்வா எனும் இறையத்துடன் இரவைக் கழித்ததாக ஒவ்வொரு காலைப்பொழுதும் உங்களுக்காக சாட்சி கூற வேண்டும். மேலும் நீங்கள் பகற்பொழுதையெல்லாம் இறையச்சத்துடன் கழித்ததாக ஒவ்வொரு மாலைப்பொழுதும் உங்களுக்காக சாட்சி கூற வேண்டும். உலகத்தின் சாபங்களுக்காக நீங்கள் பயப்பட வேண்டாம். ஏனெனில் அவை புகை மண்டலம் மறைவதைப் போல் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து விடும். மேலும் அவை பகலை இரவாக்க முடியாது. இதற்கு மாறாக, வானத்திலிருந்து இறங்கக்கூடிய சாபத்திற்கே நீங்கள் அஞ்சிக் கொண்டிருங்கள். ஏனெனில் அந்த சாபம் எவர் மீது விழுமோ அவரை அது இம்மை மறுமை ஆகிய இரு உலகிலும் நாசமாக்கி விடும்.

நீங்கள் வஞ்சக எண்ணத்துடன் உங்களை காப்பாற்றிக் கொள்ள முடியாது. ஏனெனில் உங்களை படைத்த அந்த இறைவனின் பார்வையோ மனிதனுள் ஊடுருவிச் செல்லக் கூடியதாயிருக்கிறது. ஆகவே இத்தகைய இறைவனை உங்களால் ஏமாற்ற முடியுமா?

ஆகவே நீங்கள் நேர்மையாளர்களாகி விடுங்கள். தூயவர்களாகி விடுங்கள். புனிதர்களாகி விடுங்கள். உறுதியானவர்களாகி விடுங்கள். உங்களிடையே மிகச் சிறிய அளவில் இருள் காணப்பட்டாலும் அது உங்களின் முழு ஒளியையும் அணைத்து விடும். எந்நிலையிலும் எவ்வகையிலும் உங்களிடம் அகங்காரமோ, வெளி வேஷமோ, சுயநலமோ காணப்பட்டாலும் நீங்கள் சிறிதும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குத் தகுதி அற்றவர்களாகி விடுவீர்கள். நீங்கள் சில விஷயங்களை மட்டும் கடைபிடித்துக் கொண்டு நாம் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்து விட்டோம் என நினைத்து நீங்கள் உங்களையே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள்.

ஏனெனில் உங்களிடம் முழுமையான ஒரு புரட்சி உண்டாக வேண்டும் என இறைவன் நாடுகிறான். மேலும் அவன் உங்களிடமிருந்து ஒருவித மரணத்தை விரும்புகிறான். அதன் பின் அவன் உங்களை உயிர்ப்பிப்பான். நீங்கள் ஒருவருக்கொருவர் உடனடியாக சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது சகோதரர்களின் குற்றங்களை மன்னியுங்கள். தனது சகோதரனுடன் சமாதானத்தை விரும்பாதவன் தீயவனாக இருக்கின்றான். அவன் துண்டிக்கப்படுவான். ஏனெனில் அவன் வேற்றுமையை உண்டாக்குகிறான்.

நீங்கள் எல்லா விதமான மன இச்சைகளை விட்டு விடுங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் வெறுப்பை விட்டு விடுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்து கொண்டு பொய்யர்களைப்போல் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். இதனால் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள். மனஇச்சை அதிகரித்துக் கொண்டு செல்வதை சற்றும் அனுமதிக்காதீர்கள். ஏனெனில் எந்த வாசல் வழியாக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றீர்களோ அவ்வாசல் வழியாக மன இச்சை கொண்ட மனிதரால் ஒருபோதும் நுழைய முடியாது.

இறைவனின் வாயிலிருந்து வெளிவந்து, நான் விளக்கியிருப்பவையாகிய இந்த விஷயங்களை ஏற்றுக் கொள்ளாதவன் எவ்வளவு பேறிழந்தவனாக இருக்கிறான்! வானத்தில் உங்களோடு இறைவன் திருப்தி அடைய வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் உங்களில் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றிலிருந்து பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

உங்களிடையே எவன் தனது சகோதரரின் குற்றத்தை அதிகமாக மன்னிப்பாரோ அவரே பெரும் கண்ணியத்திற்குரியவராவார். இதற்கு மாறாக மன்னிக்காமல் பிடிவாதத்தில் ஆழ்ந்திருப்பவன் பாக்கியமிழந்தவனாயிருக்கின்றான். ஆகவே அவனுக்கு என்னோடு எவ்வித தொடர்பும் இல்லை. இறைவன் தூய்மையானவனாகவும் தன்மானம் மிக்கவனுமாய் இருப்பதால் அவனது சாபத்திற்கு அதிகமாக அஞ்சிக் கொண்டிருங்கள்.

தீயவன் இறைவனுடைய நெருக்கத்தைப் பெற முடியாது. ஆணவம் கொண்டவன் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. அநீதி இழைப்பவன் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. நம்பிக்கை துரோகி அவனது நெருக்கத்தைப் பெற முடியாது. அவனுடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயல்கின்ற விஷயத்தில் தன்மான உணர்வை வெளிப்படுத்தாதவர் அவனது நெருக்கத்தைப் பெற முடியாது.

நாய்களைப் போன்றும், எறும்புகளைப் போன்றும் கழுகுகளைப் போன்றும் உலகத்தின் மீது விழுகின்றவர்கள் உலக சுகபோகங்களில் மூழ்கியிருப்பவர்கள் அவனது நெருக்கத்தை பெற முடியாது. பரிசுத்தமற்ற ஒவ்வொரு கண்ணும் அவனை விட்டும் விலகியிருக்கிறது. தூய்மையற்ற ஒவ்வொரு இதயமும் அவனை அறிவதில்லை. எவர் அவனுக்காக நெருப்பில் விழுவாரோ அவர் அந்நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவார். எவர் அவனுக்காக கண்ணீர் வடிப்பாரோ அவர் பின்னர் மகிழ்ச்சியடைவார். எவர் அவனுக்காக உலகத்தை இழக்கத் துணிவாரோ அவ்வுலகம் அவருக்குக் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் உண்மையான உள்ளத்துடனும் முழு நம்பிக்கையுடனும் தீவிரமான முயற்சியுடனும் இறைவனுக்கு நண்பர்களாக ஆகிவிடுங்கள்; அப்போது அவனும் உங்களுடைய நண்பனாக ஆகிவிடுவான். வானத்தில் உங்கள் மீது கருணை உண்டாகும் பொருட்டு நீங்கள் உங்களின் கீழ் இருப்பவர்கள் மீதும் உங்களது மனைவியர் மீதும் உங்களது ஏழை சகோரர்கள் மீதும் கருணை காட்டுங்கள். உண்மையாகவே நீங்கள் அவனுக்காகவே ஆகிவிடுங்கள். அப்போது அவனும் உங்களுக்காகவே ஆகிவிடுவான்.

**(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 11)**

EDITOR
M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 7 June 2018 Issue No. 23

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad